www.tamilarangam.net

Thursday 31st December

- முகப்பு
- About
- RSS-செய்தியோடை

இனியொரு..மாற்று அரசியலுக்கான உரையாடல் வெளி

Click : BookMark inioru

- முகப்பு
- இன்றைய செய்திகள்
- அரசியல்
- இலக்கியம்/சினிமா
- ஆக்கங்கள்
  - சிறுகதைகள்
  - கவிதைகள்

Search

முகப்பு » 20 வயது கூட நிரம்பாத இளஞன் தம்பி பிரபாகரன்-ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர்(இரண்டாம் பகுதி)

# 20 வயது கூட நிரம்பாத இளஞன் தம்பி பிரபாகரன்-ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர்(இரண்டாம் பகுதி)

தமிழ்மணம் பரிந்துரை : 0/0


Pathivu Toolbar ©2009thamizmanam.com

> முள்ளி வாய்க்காலில் இல்லாமல் போன புலிகளின் தலைமையை உருவாக்குவதில் வாழும் சாட்சியான ஐயர் இங்கு மனம் திறந்து பேசுகிறார். நூலாக வெளிவரவிருக்கும் இந்த ஆவணச் சாட்சி இனியொருவில் வெளியாகும் இரண்டாம் பதிவு.

பகுதி ஒன்றை வாசிக்க..

www.tamilarangam.net

70 களின் நடுப்பகுதியில் எமக்குத் தெரிந்தவையெல்லாம் ஆயுதங்களைச்



சேகரித்துக்கொள்வதும் எதிரியை அழித்துவிடுவதும் தான். சந்திகளும் சாலைத் திருப்பங்களும் இருள் சூழ்ந்து கோரமாய்த் தெரிந்த ஒரு காலம்! எங்காவது ஒரிடத்தில் ஒருசில மணி நேரத்திற்கு மேல் தரித்திருக்க முடியாத மரண பயம். மரணத்துள் வாழ்தல் என்பதைத் தமிழ் உணர்வுக்காக நாமே வரித்துக்கொண்டோம்.

மயானமும், கோவில்களும், பாடசாலைகளும், தோட்டங்களும், வயல் வரப்புக்களும் தான் எமது உறங்குமிடம். பல காத தூரங்களை நடந்தே கடந்திருக்கிறோம்! எங்கள் சைக்கிள்கள் கூட எம்மோடு உழைத்து உழைத்து இரும்பாய்த் தேய்ந்து போயின!! முட்களும், புதர்களையும், கற்களும் பல தடவைகள் எமது பாதணிகளாகியிருக்கின்றன. குக் கிராமங்கள், அடர்ந்த காடுகள் என்று எல்லா இடங்களுக்குமே எமது தமிழ் உணர்வு அழைத்துச் சென்றிருக்கிறது.

இவ்வேளையில் தான் எமது மத்திய குழு அமைக்கப்படுகிறது. அதன் பருமட்டான திட்டம் வழி முறை இதுதான்:

1. இலங்கை அரசிற்கு எதிரான ஆயுதப் போராடம்.

2. தமிழீழம் கிடைத்த பின்னர் தான் இயக்கம் கலைக்கப்படும்.

3. இயக்கதில் இருப்பவர்கள் காதலிலோ பந்த பாசங்களிலோ ஈடுபடக்கூடாது.

4. இயகத்திலிருந்து விலகி வேறு அமைப்பில் இணைந்தாலோ, அல்லது வேறு அமைப்புக்களை ஆரம்பித்தாலோ அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

நாம் உருவாக்கிய இந்த மத்திய குழு தமிழ்ப் புதிய புலிகள்(TNT) என்ற பெயருடனேயே இயங்குகிறது.

எமது சூழல், அரசியல் வறுமை, தமிழரசுக் கட்சியின் உணர்ச்சிப் பேச்சுக்கள், சிங்களப் பேரின வாததின் கோரம் என்று எல்லாமே எம்மை சுற்றி நிற்க



எமக்கு நியாயமாகத் தெரிந்தவை தான் இந்தக் கோஷங்கள். நீண்ட அனுபவங்களைக் கடந்து தொலை தூரம் வந்துவிட்ட பின்னர், இந்தச் சுலோகங்கள் கூட எனக்குக் கோரமாய்த் தான் தெரிகின்றன.

அரசியல் திட்டமென்று நாமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த இந்தச் சுலோகங்கள் எல்லாம் பின்னதாக ஆயிரமாயிரம் போராளிகள் கொன்று

www.tamilarangam.net

போடப்படுவதற்கு ஆதாரமாக அமையும் என்பதை நாமெல்லாம் எதிர்பார்த்திருக்கவில்லை. எவ்வாறாயினும் முதல் இயக்கப் படுகொலையை செட்டி தான் ஆரம்பித்து வைத்தார் எனலாம்.

அனுராதபுரம் சிறையிலிருந்து தப்பி, செட்டி, கண்ணாடி பத்மநாதன், சிவராசா, ரத்னகுமார் ஆகிய நால்வரும் காடுகள் வழியாக வந்து கொண்டிருந்த வேளையில் அவர்களிடையே ஒரு வாக்குவாதம் ஏற்படுகிறது. அதெல்லாம் அரசியல் விவாதமா என்ன? செட்டி இன்னும் கொள்ளையடித்துப் பணம் சேர்க்க வேண்டும் என்ற வகையில் நடந்து கொள்ள அதைப் பத்மநாதன் எதிர்த்திருக்கிறார். இதனால் அவர் காட்டிக்கொடுக்கலாம் என்ற பயத்தில் பத்மனாதனை ஏனைய மூவரும் செட்டியின் வழிநடத்தலில் காட்டுக்குள்ளேயே கொன்று போட்டுவி, அங்கேயே பிணமாக்கி எரித்துவிட்டு வந்திருக்கின்றனர்.

கண்ணாடி பத்மநாதன் சற்று வேறுபட்டவர். அவர் இதற்கு முன்னதாக குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளியல்ல. வானொலி திருத்தும் கடைவைத்து நடத்தி வந்தவர். கண்ணாடி பத்மநாதன் கொலைகளுக்காக் கைது செய்யப்படவில்லை. அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களுக்காகக் கைதானவர். குற்றச் செயல்களிலிருந்து விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிபதை இவர் எதிர்த்திருக்கலாம். இவர் சகோதரப் படுகொலைகளைக் கூட எதிர்த்தவர் என்று நான் அறிந்திருக்கிறேன். பூநகரிக் காட்டுக்குள் நிகழ்ந்த இந்தக் கோரம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிக்கிறது என்பது தமிழினத்தின் சாபக்கேடு.

இந்தக் கொலை தொடர்பாகப் பிரபாகரனிடம் நான் கேட்டபோது கண்ணாடி பத்மநாதன் காட்டிக்கொடுக்கலாம் என்ற பயத்தின் அடிப்படையிலேயே கொன்றதாகத் தன்னிடம் செட்டி சொன்னதாக எனக்குச் சொன்னார்.

எங்கோ தெருக் கோடியில், உள்ளூரிலேயே அறியப்பட்டத மூலையில்,



கால்படத கிராமங்களில் எல்லாம் இருந்த இளைஞர்கள், பெண்கள் எல்லாம் உலக வல்லரசுகளின் செய்திகளில் ஈழப் போராளிகளாகவும், உலகின் மிகப்பெரிய கெரில்லா இயக்கமாகவும் பேசப்படுகிற ஒரு சூழல் பிரபாகரனின் விட்டுக்கொடாத உறுதியில்ருந்தே கட்டியமைக்கப்பட்டது எனலாம். பல தடவை அவர் தனித்து யாருமற்ற அனாதையாகியிருக்கிறார். நண்பர்களை இழந்து தனிமரமாகத் தவித்திருக்கிறார். உண்ண உணவும், உறங்க இடமுமின்றி தெருத் தெருவாக அலைந்திருகிறார்.

இவையெல்லாம் அவரைப் போராட்டத்திலிருந்து அன்னியப் படுத்திவிடவில்லை. இறுக்கமான உறுதியோடு மறுபடி மறுபடி போராட்டத்திற்காக உழைத்திருக்கிறார் என்பதை அறிந்தவர்களில் நானும் ஒருவன்.

துரையப்பா கொலை நிகழ்ந்து, எல்லாருமே கைது செய்யப்படுகின்றனர். பொலீசாரும் உளவுப் படையினரும் பிரபாகரனை வேட்டையாட அலைகின்றனர்.

www.tamilarangam.net


ஆல்பிரட் துரையப்பா

துரையப்பா கொலையின் பின்னதாக காங்கேசந்துறையில் தான் தம்பி பிரபாகரன் தலைமறைவாக வாழ்கிறார். ஏனையோரின் கைதுக்குப் பின்னர் அவர் அங்கு வாழ முடியாத நிலை. அவரது ஊரான வல்வெட்டித்துறையோ வடமராட்சியோ அவர் கால்வைப்பதற்குக் கூட நினைத்துப் பார்க்கமுடியாத நிலையிலிருந்தது. போலிசார் வலைவீசித் தேடிக்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தினூடே பயணம் செய்வதென்பதே முடியாத காரியமாக இருந்தது. இந்த நிலையில் தான் செட்டியிடம் முன்னர் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் எமது ஊரான புன்னாலைக்கட்டுவனை நோக்கி வருகிறார்.

அவ்வாறு அவர் வரும் போது அவரிடம் ஒரு சல்லிக் காசு கூட செலவுக்கில்லை. அன்று அவர் உணவருந்தியிருப்பார் என்பது கூடச் சந்தேகமே. அவருடைய சிறிய தொடர்பாளர்கள் கூடக் கைது செய்யப்பட்டுவிட்டனர். எந்த அடிப்படை வசதியுமின்றி அனாதரவான நிலையிலேயே நாம் அவரைச் சந்திக்கிறோம்.

எம்மிடம் வந்த பிற்பாடு முன்னைய தொடர்புகளைச் சிறிது சிறிதாக ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறோம்.

எமக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் இளைஞர்கள் மட்டும் தான். அவர்கள் அனைவருமே கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். பணம் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. நான் ஒருவன் மட்டும் தான் கோவிலில் பூசை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது தொழிலை நிறுத்திவிட்டு முழுநேரப் போராளியாகத் தீர்மானித்திருந்தேன். பின்னர் எமது நடவடிக்கைகளுக்குத் தேவைபடும் பணத்தைச் சேகரித்துத் தற்காலிகமாகப் பெற்றுக்கொள்வதற்காக நான் எனது பிராமணத் தொழிலைத் தொடர்வதாகத் தீர்மானித்தேன்.

இதற்கு மேலாக எனது வீட்டிலிருந்த நகைகளை அடகு பிடித்தே போராளிகளின் போக்குவரத்துச் செலவு, புத்தூர் வங்கிக் கொள்ளைக்கான திட்டமிடல் பணம் போன்ற செலவுகளைச் சமாளித்துக் கொண்டோம். இதே போல, துரையப்பா கொலையின் திட்டமிடலை மேற்கொள்வதற்காக பற்குணம் தனது தங்கையின் நகைகளை அடகுபிடித்தே பணம் திரட்டிக்கொண்டார். சில வேளைகளில் பிரபாகரன் ஒரு வேளை மட்டுமே ஏதாவது உணவருந்தித் தான் வாழ வேண்டிய நிலை இருந்தது. எனது வரலாற்றுப் பதிவில் வருகிற இன்னொரு அத்தியாயத்திலும் பிரபாகரன் தனிமைப்பட்டுப் போகிற இன்னொரு சந்தர்ப்பமும் பதியவுள்ளேன்.

இந்த எல்லா இக்கட்டான சூழலிலும் பிரபாகரனின் உறுதி குலையாத



மனோதிடம் கண்டு நான் வியப்படந்திருக்கிறேன்.பலர் அவர் பின்னால் அணிதிரள்வதற்கும் இது காரணமாக அமைந்திருக்கிறது எனலாம். பிரபாகரனும் நானும் பெரிதாகப் படித்திருக்கவில்லை. பிரபாகரன்

www.tamilarangam.net

பழகுவதற்கு இயல்பானவர். ஒரு குறித்த இயல்பான தலைமை ஆளுமை கூட இருந்ததை மறுக்க முடியாது.

என்னை பொறுத்த வரை ஆரம்பத்தில் எம்மோடு இணைந்த பலர் மிகத் தவறான சொந்த நலனை முதன்மைப் படுத்தியவர்களாகவே காணப்பட்டனர். புத்தூர் கொள்ளைப் பணத்தில் ஜெயவேல் மற்றும் ராஜ் ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தாம் முழு நேரமாக இயங்குவதானால் தமது குடும்பதைப் பராமரிக்க இந்தப் பணத்தை அவர்கள் கோரினர். இவர்களில் ராஜ் என்னசெய்கிறார் எங்கிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. ஜெயவேல் மரணமடைந்திருக்க வேண்டும்.

20 வயது கூட நிரம்பாத இளஞன் தம்பி பிரபாகரன். மற்ற இளைஞர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவது, பெண்கள் பின்னால் அலைவது, சினிமாவுக்குச் செல்வது, புகைப்பிடிப்பது, மது அருந்துவது ஏன் தமது எதிர்காலம் குறித்துச் சிந்திப்பது போன்ற எல்லா இளம் பிராயத்தின் இயல்பான பழக்கவழக்கங்கள் எதிலுமே பிரபாகரனிற்கு நாட்டமிருக்கவில்லலை. சினிமாக் கூடப் பார்பதில்லை. கதைப் புத்தகங்கள் கூட வாசிப்பதில்லை. துப்பாக்கிகளும் ஆயுதங்களும் வருகின்ற படங்கள் என்றாலோ புத்தகங்கள் என்றாலோ மட்டும்தான் அவர் அவை பற்றிச் சிந்திப்பார். தமிழீழம் மட்டும் தான் ஒரே சிந்தனையாக் இருந்தது. அதற்கான இராணுவத்தைக் கட்டியமைப்பது தான் தனது கடமை என எண்ணினார். இதற்கு மேல் எதைப்பற்றியும் அவர் சிந்திதது கிடையாது. எப்போதுமே தனது சொந்த வாழ்க்கை குறித்தோ, அரசியல் வழிமுறை குறித்தோ சிந்திதது கிடையாது.

இவ்வாறு பெரும் மன உழைச்சல், அர்ப்பணம், தியாகம் என்பவற்றினூடாக ஐந்து பேர் கொண்ட மத்திய குழு தமிழ்ப் புதிய புலிகளின் மத்திய குழுவாக உருவாகிறது. புத்தூர் வங்கிப்பணத்தை வைத்துக்கொண்டே பயிற்சி முகாமைப் புளியங்குழத்தில் உருவாக்கிக் கொள்கிறோம். இவ்வாறு உருவான பயிற்சி முகாமைத் தவிர ஒரு பண்ணை ஒன்றை உருவாக்கிக் கொள்ளவும் தீர்மானிக்கிறோம். புதிதாக போராளிகளை உள்வாங்கி வடிகட்டி அதன் பின்னர் பயிற்சி முகாமிற்கு அனுப்பும் நோக்கத்துடனேயே



இந்தப் பண்ணை உருவாக்கப்படுகிறது. இந்தப் பண்ணை வவுனியாப் பூந்தோட்டத்தில் உருவாகிறது. விவசாய நிலம் ஒன்றிலேயே இதை அமைத்துக் கொள்கிறோம். அந்த நிலம் காங்கேசந்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசிற்குச் சொந்தமானது.

காங்கேசந்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசிற்குச் தெரிந்தவரான கணேஸ் வாத்தி என்பவரூடாகவே பண்ணைக்குரிய நிலத்தைப் பெற்றுக்கொள்கிறோம். 1976 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்தப் பண்ணை செயற்படும் வந்துவிட்டது. இதே ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி தான் புத்தூர் வங்கிக் கொள்ளை நடந்தது. சில மாதங்களின் உள்ளாகவே பண்ணையையும், பயிற்சி முகாமையும் உருவாக்கும் நிலைக்கு வந்துவிட்டோம். இவ்வேளையில் தம்பி பிரபாகரனும் நானும் மட்டுமே முழு நேரச் செயற்பாட்டாளர்களாக இருந்தோம்.

இந்தப் பண்ணைக்கு உள்வாங்கும் நோக்குடன் பத்துப் பேர் வரை பேசியிருந்தோம். அவர்கள் அனைவருமே அங்கு வருவதாக உறுதியளித்திருந்தனர். அவர்களுள் புத்தூர் கொள்ளைப் பணத்திலிருந்து 5

www.tamilarangam.net

ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்ட ஜெயவேல் மற்றும் ராஜ் ஆகியோரும் அடங்குவர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக வவுனியா புகையிரத நிலையத்திற்கு அவர்களை வரச் சொல்லியிருந்தோம். அவர்களுக்காக நான் புகையிரத நிலையத்தில் காத்திருந்தேன்.

இதில் ஏமாற்றம் என்னவென்றால் இந்தப் பத்துப் பேரில் ஒரே ஒருவர் மட்டுமே அங்கு வந்து சேர்ந்தார் என்பது மட்டுமே. கற்பனைகளோடு காத்திருந்த எனக்கு ஏற்பட்ட இந்த ஏமாற்றம் அதிர்ச்சியாகவும் இருந்தது. அங்கு வந்து சேர்ந்தவர் ஞானம் என்ற சித்தப்பா மட்டுமே. இவ்வேளையில் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பிரபாகரன் பண்ணைக்கு வரவில்லை. அவர் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தார். ஆக, நானும், சித்தப்பாவும் பண்ணையில் தனித்துப் போனோம். எம்மிடம் பணம் வாங்கிக் கொண்ட இரண்டு பேரும் கூட அங்கு வரவில்லை என்பது விபரிக்க முடியாத விரக்திமனோபாவத்தைத் தோற்றுவித்திருந்தது.

இதற்கு மறு நாள் நாம் எதிர்பார்க்காமலே இன்னொருவர் வருகிறார். அவர் பெயர் நிர்மலன். அவரைக் கறுப்பி என்றும் அழைப்போம்.

இவ்வேளையில் எமக்கு எந்த வெளித் தொடர்புகளும் இருக்கவில்லை. மத்திய குழுவிலிருந்த எம்மைத் தவிர, ராகவன் மற்றும் குலம் ஆகியோரே எம்முடன் இருந்தனர். அதிலும் ராகவன் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்திக்கொண்டு ஆதரவு மட்டத்திலேயெ இருக்கின்றார். குலம் தனது குடும்பச் சுமைகள் காரணமாக முழு நேரமாகச் செயற்பட முடியாத நிலையில் ஆதரவு மட்ட வேலைகளேயே செய்து வந்தார்.

இப்போது பண்ணை ஆரம்பமாகிவிட நான், நிர்மலன், சித்தப்பா பின்னதாக இணைந்து கொண்ட பற்குணா ஆகியோரே பணியாற்றுகிறோம். இங்கு விவசாயத்தையும் ஆரம்பித்துவிட்டோம்.

இதெ வேளை உரும்பிராயைச் சேர்ந்த தமிழர்சுக் கட்சி முக்கியஸ்தரான சேகரம் என்று அழைக்கப்படும் சந்திர சேகரம் என்பவர் எம்மில் சிலரைச் சந்தித்துக்கொள்வார். அவரின் ஊடாக மட்டக்களப்பைச் சார்ந்த மைக்கல் என்பவரின் தொடர்பு எமக்குக் கிடைக்கிறது.

மைக்கல் மட்டக்களப்பில் ஈடுபட்ட அரச எதிர்ப்புப் போராட்டங்களால் பொலீசாரால் தேடப்பட்டு வந்தவராவர். இதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கில் வடக்கிற்கு வந்து உரும்பிராயில் சந்திரசேகரத்தைச் சந்திக்கிறார். சந்திரசேகரம் அவரை எமக்கு அறிமுகப்படுத்த, அவருடனான உறவை நாம் வளர்த்துக் கொள்கிறோம். துடிப்பான கிழக்கு மாகண இளைஞனின் தொடர்பு எமக்குப் புதிய உற்சாகத்தைத் தருகிறது. இந்த உற்சாகத்தின் வேகத்தில் அவரை உடனடியான செயற்திட்டத்திற்குள் உள்வாங்குவதாகத் தீர்மானிக்கிறோம்.

துணிவும், செயற்திறனும் கொண்டவராதலாலும், ஏற்கனவே வன்முறைப் போராட்டங்களில் அனுபவமுள்ளவர் என்பதாலும், எமது புளியங்குளம்



பயிற்சி முகாமிற்கு அவரைக் கூட்டிச் செல்கிறோம். அங்கே சில நாட்கள் மைக்கல் எம்முடன் தங்கியிருந்தார். அதன் பேறாக ராஜன் செல்வநாயகத்தைம் என்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்வதற்காக அவரை ஏற்படு செய்கிறோம்.

www.tamilarangam.net

அதன் முதற்படியாக அவரிடம் பணம் கொடுத்து ராஜன் செல்வநாயகத்தின் நடமாட்டத்தை உளவறிவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவரை அனுப்பி வைக்கிறோம். எம்மிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்ற மைக்கல் பின்னதாக பல நாட்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவில்லை.

அவர் மட்டக்களப்பு சென்று தனது வேலைகளை முடித்துத் திரும்புவார் என நாம் நம்பிக்கையுடன் காத்திருந்தோம். நாட்கள் கடந்தன மைக்கல் வரவில்லை. அவ்வேளையில் சேகரத்தைச் சந்தித்த போது, அவர் மைக்கல் இன்னமும் யாழ்ப்பணத்தில் தான் தங்கியிருப்பதாக அறியத் தந்தார். அத்தோடு எம்மிடம் வாங்கிய பணத்தை வைத்து அவர் பகிரங்கமாக பல இடங்களுக்குப் போய் வருவதாகவும். நாம் குறித்த எந்த வேலைகளிலும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை என்றும் சொன்னார்.

இதை அறிந்து கொண்ட நாம், மைக்கலை பல தடவைகள் எம்மை வந்து சந்திக்குமாறு கோரியும் அவர் எம்மிடம் வரவில்லை.

மைக்கலிற்கு எமது உறுப்பினர்கள் பலரைத் தெரிந்திருந்தது. எமது ரகசிய இடங்களைத் தெரிந்து வைத்திருந்தார். இதனால் நாம் மேலும் பதட்டமடைந்தோம்.

அப்போது தம்பி பிரபாகரன் என்னிடமும் குமரச்செல்வம் என்பவரிடமும் மைக்கலைக் கூப்பிட்டு எச்சரிக்க வேண்டும் என்றும் எல்லை மீறினால் கொலை செய்துவிட வேண்டும் என்றும் கூறுகிறார். இதை அவர் மத்திய குழுவிலிருந்த ஏனையோருக்குச் சொல்லவில்லை. எம்மிருவருக்கு மட்டுமே அதைத் தெரிவிக்கிறார். நாங்கள் இது குறித்து எல்லோரிடமும் விவாதிக்க வேண்டும் என்று கூறினோம். அதற்கு மத்திய குழுவிலிருந்த பட்டண்ணாவும் சின்னராசும் பயப்படுவார்கள்; அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கூறுகிறார். அதாவது மைக்கலைக் கொலைசெய்ய வேண்டிய நிலை ஏற்படுமானால் அதற்கு இவ்விருவரும் சம்மதம் தெரிவிக்க மாட்டார்கள் என்பதால் இவ்விவகாரத்தை அவர்களிடம் சொல்ல வேண்டாம் என்கிறார் தம்பி பிரபாகரன்.

அந்த வேளையில் பிரபாகரன் சொல்வது எமக்கு நியாயமாகப் பட்டது இதனால், நாம் இந்தச் செயலுக்குச் சம்மதம் தெரிவித்தோம்.
தொடர்ச்சியான எமது வற்புறுத்தலின் பேரில் மைக்கல் புளியங்குளத்திற்கு எம்மிடம் பேசுவதற்காக வருகிறார். யானைகளும், விசப் பாம்புகளும் நடமாடும் இருண்ட காட்டினுள் மயான அமைதி நிலவுகிறது. தீயின் கோரம்



நிலவின் ஒளியை விழுங்கிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் மைக்கலுடன் உரையாடுகிறோம். பின்னர், நானும் சற்குணமும் காட்டிலுள்ள குடிசையில் அமர்ந்திருக்க, பிரபாகரனும் குமரச்செல்வமும் மைக்கலைச் சற்றுத் தொலைவே கூட்டிச்செல்கிறார்கள். மைக்கலைக் கூட்டிச்சென்ற இரண்டு நிமிடத்திற்கு உள்ளாகவே துப்பாக்கி வெடிச் சத்தம் ஒன்று கேட்கிறது. நாம் அதிர்ந்து போகிறோம்……

(மூன்றாம் பதிவு சில நாட்களில்..)

குறிப்பு : இதனை இனொயொருவில் இருந்து ஏனைய இணையங்களில் மீள் பதிவிடுபவர்கள் கட்டுரைக்கான பின்னூட்டங்களில் பொறுப்புணர்வுடன் கட்டுரையை மேலும் முழுமையான ஆவணமாகச் செழுமைப்படுத்துமாறும்,

www.tamilarangam.net

ஆக்கபூர்வமற்ற, மன உளைச்சலைத் தூண்டும் கருத்துக்களைத் தவிர்க்குமாறும் வேண்டுகிறோம்.

(இன்னும் வரும்…)

## 16 கருத்துக்கள்

1. *marai*
   Posted on 12/30/2009 at 1:13 am

   very good imagine

   Reply
   - *noyyalnathi*
     Posted on 12/30/2009 at 9:59 am

     துரோகிகளின் கற்பனையை தாங்கிப்பிடிக்கும் ஆயுதமாக இனிஒரு மாறி வருகிறதோ ஜெயமோகன் இப்படித்தான் முதலில் எதிர்த்து பின்பு தூக்கிவிட்டார்கள்.. இப்போ பிரபாகரனை தூக்கிவிட்டு இப்போது கீழே வீச ஜெகத்கஸ்பர் வழியில் செல்கிறது இனிஒரு

     Reply
2. *Nadaraja*
   Posted on 12/30/2009 at 6:48 am

   'காங்கேசந்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசிற்குச் தெரிந்தவரான கணேஸ் வாத்தி என்பவரூடாகவே பண்ணைக்குரிய நிலத்தைப் பெற்றுக்கொள்கிறோம். 1976 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்தப் பண்ணை செயற்படும் வந்துவிட்டது. '

   திருநாவுக்கரசு எப்போ காங்கேசன்துறைதொகுதி எம்பியாக இருந்தார். அவர் வட்டுக்கோட்டைத்தொகுதி எம்பி. அதுவும் 1977 ன் பின்னர்தான்

   Reply
3. *Nadaraja*
   Posted on 12/30/2009 at 6:56 am

   'காங்கேசந்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசிற்குச் தெரிந்தவரான கணேஸ் வாத்தி என்பவரூடாகவே பண்ணைக்குரிய நிலத்தைப் பெற்றுக்கொள்கிறோம். 1976 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்தப் பண்ணை செயற்படும் வந்துவிட்டது. '

   திருநாவுக்கரசு எப்போ காங்கேசன்துறைதொகுதி எம்பியாக இருந்தார். அவர் வட்டுக்கோட்டைத்தொகுதி எம்பி. அதுவும் 1977 ன் பின்னர்தான்

   ஐயர் பற்றிய மேலதிக தகவல்கள் தேவை. அவசியமானதும் கூட. விடுதலைப்புலிகளையோ பிரபாகரனையோ பற்றி சாட்சிசொல்வதற்கு ஆரம்பகாலத்தில் இயக்கத்திலிருந்தார் என்ற சாட்சி மட்டும் போதாது. அவா; முள்ளிவாய்க்கால் வரை தமிழீழப்போராட்டத்தில் என்ன பங்கு வகித்துக்கொண்டிருந்தார் என்பது முக்கியம். இல்லாவிடில் வெறும்

www.tamilarangam.net

நக்கீரன் விளையாட்டாய் போய்விடும். துப்பறியும் நாவல் படிக்க எமக்கிப்போ நாட்டமில்லை.

Reply

4. *வாணி*
   Posted on 12/30/2009 at 8:16 am

   நக்கீரன் , மத(ம்) போதகர் ஜெகத் கஸ்பார் ஆகியோர் வரிசையில் ஐயரும் எழுத ஆரம்பித்திருக்கிறார். காற்றுள்ள போதே தூற்றுக் கொள்ள முயல்வது மட்டும் புரிகிறது. பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் லண்டனில் இன்னொரு கொலை விழுந்திருக்கும். .

   Reply

5. *OpenTalk*
   Posted on 12/30/2009 at 9:21 am

   // நீண்ட அனுபவங்களைக் கடந்து தொலை தூரம் வந்துவிட்ட பின்னர், இந்தச் சுலோகங்கள் கூட எனக்குக் கோரமாய்த் தான் தெரிகின்றன//

   இவை கோரமா இல்லையா என்பது இன்றைய நிலையில் வைத்து ஆராயப்பட வேண்டி விடயமல்ல. இது தொடர்பாக ஏற்கனவே வழங்கியிருந்த பின்னூட்டத்தில் தெரியப்படுத்தியிருந்தேன். உங்கள் முதலாவது பதிவிற்கும் இரண்டாவது பதிவிற்கும் இடையில் சில முரண்பாடுகள் உள்ளன. இது ஒருவரைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தும் வண்ணம் தொடரப்படும் முயற்சியாகத் தெரிகின்றது.

   1976 மே மாதத்திற்குப் பின்னர் புதிய தமிழ்ப் புலிகள் அமைப்பு இல்லை என்பதும் சில மாற்றங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருப் பெற்றதும் வரலாறு.

   உங்களின் இப் பதிவிற்குப் பின்னர் நீங்கள் குறிப்பாக அக்காலகட்டம் தொடர்பாக வெளிவந்த புத்தகங்கள் சிலவற்றைப் படித்துப் பார்த்து அதன் பின்னர் எழுதுவது சிறந்தது. அவ்வாறு இல்லாதுவிடில் புனையப்பட முயற்சிக்கும் விடயங்கள் சரியாகப் பொருந்தாது போகும்…

   Reply

6. *thivakaran*
   Posted on 12/30/2009 at 9:49 am

   வணக்கம் ஐயா,

   புலிகளில் இருந்த போதும், பின்னர் குமணன் உடன் சேர்ந்து புளட்டை உருவாகிய போதும், நேர்மையானவர் எனப் பெயர் பெற்றவர் நீங்கள். உண்மையாகவே தகவல்களை சொல்வீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இவ்வளவும் நாளும் எத்தனை பேர் கேட்டும் எழுதாமல் இருந்த நீங்கள் எழுத வந்திருப்பது என் போன்றவர்களுக்கு ம்கிழ்ச்சியாக இருக்கிறது. லண்டனில் இருக்கும் ராகவன், சுவிசில் இருக்கும் லோகன், பிரான்சில் வசிக்கும் கிருபா போன்றோர் தொடர்பாக அடிக்கடி குறிப்பிடுகிரீர்கள். ஏன் அவர்கள் உங்களுடன் சேர்ந்து இந்த எழுத்தை மெருகூட்ட வரவில்லை என்பது வியப்பாக இருக்கிறது. மற்றப்படி, புதியவர்கள் உங்களை லண்டன் பத்மனாப ஐயரோடு சேர்த்து குழப்பி விடுகிறார்கள்.
   புலிகளின் ஆவணங்களிலும் நீங்கள் ஐயர் என்றே குறிப்பிடப் பட்டிருப்பது பலருக்குத் தெரியாத விடயம். இனியொரு காரர்களாவது இவ்வாறான சிறு குறிப்புக்களைக் கொடுக்கலாமே?

www.tamilarangam.net

Reply

7. *thivakaran*
   Posted on 12/30/2009 at 9:52 am

   இன்னும் ஒரு கேள்வி: பேபி சுப்ரமணியம்> நந்தன், குமரப்பா போன்றோர் பற்றி ஏன் சொல்லவில்லை?

   Reply

8. *noyyalnathi*
   Posted on 12/30/2009 at 9:55 am

   ஜகத் கஸ்பரின் எழுத்துகளைப்போல் துரோகம் என்பதை மெதுவான விசமாக ஏற்றும் பணியில் அய்யரும் இனிஒரு.காம் கூட்டோ… விவாதம் எதையும் தாங்கும் மனம் உள்ளது துரோகம் தாங்கும் மனம் இல்லை… அய்யரைத்தொடர்ந்து கையாலாகா துரோகிகள் எத்தனை பேரின் உரையை உண்மை சாட்சி என் இனிஒரு வெளியிட உள்ளதோ.. பாவப்பட்ட தமிழினத்தின் மீது இன்னும் எத்தனை துரோக கணைகளோ?

   Reply

9. *proffessor*
   Posted on 12/30/2009 at 9:57 am

   இங்கு பின்னூட்டமிடுபவர்கள் அனேகமானோர் பொறுப்புணர்வு இல்லாத 1976க்கு பின்னர் பிறந்தவர்களும் போராட்ட வரலாற்றினை முன் பின் அறியாதவர்களும் பிரபாகரனின் உண்மை வரலாற்றினை அறியவிரும்பாத புலிகளின் தீவிர அபிமானிகளுமே பொறுப்புணர்வு அற்றவகையில் மன உளைச்சலை ஏற்படுத்துவார்கள்.
   இங்கு ஐயர் எந்தவித ஒளிவு மறைவுமின்றி கடந்தகாலத்தை வெளிப்படுத்த முனைகிறார்.
   மேலும் ஐயரின் பதிவில் சற்குணம், பற்குணம் என இரு வேறு குழப்பமான பெயர்கள் வருகிறது. இரு பெயரிலும் ஆரம்பகாலத்தில் செயற்பட்டுள்ளனர். இதனை சரியாக கவனிக்க இனியொரு.
   அதேபோல் இதில் சொல்லப்படும் ஆரம்ப போராட்ட முன்னோடிகளின் பிற்காலம் எப்படி போராட்டத்தை விட்டு வெளியேறினர், இப்போது எங்கிருக்கிறார்கள் என்பதையும் முடிந்தவரை பதிவுக்கு கொண்டுவரவும்.
   அடுத்து மட்டக்களப்பு பா.சி (சின்னத்துரை) பின்னர் புலிகளின் நீதி நிர்வாக பிரிவில் செயற்பட்ட யோகன் பாதர் எப்படி புலிகளில் ஆரம்பத்தில் இணைந்துகொண்டார் மைக்கலுக்கு பின்னர் என்பதையும் ஐயரிடம் கேட்டு பதியவும்.
   சிஜடி பஸ்தியாம்பிள்ளை கொல்லப்பட்ட பண்ணைக்கு யோகன் தான் பொறுப்பாக இருந்தவர்.

   Reply

10. *samaran*
    Posted on 12/30/2009 at 10:03 am

    ஐயர் பற்றிய மேலதிக தகவல்கள் தேவை

    Reply

11. *Alagi*
    Posted on 12/30/2009 at 12:51 pm

www.tamilarangam.net

ஐயர் எழுதிக் கொண்டு செல்லும் தொனியைப் பார்க்கும் போது மைக்கலை சுட்டது சரி என்பதான மாயையை ஏற்படுத்துகிறது. ஆனால் அப்படுகொலை நடந்த போது மத்திய குழு அமைக்கப்பட்டிருந்தது. மத்திய குழுவில் விவாதிக்கப்பட்டு அந்த முடிவு எடுக்கப்படவில்லை. அதற்கு ஐயரும் உடைந்தையாக இருந்தார் . இந்த படுகொலையுடனேயே விடுதலைப் போராட்டத்தின் அராஜகப் போக்கு துளிர் விட தொடங்குகிறது.ஆகவே அப்படுகொலையைப் பார்த்து கொண்டிருந்த ஐயர் முதலில் சமூகத்திடம் மன்னிப்பு கோரவேண்டும்.

Reply

12. *Ganthy*
Posted on 12/30/2009 at 1:33 pm

//70 களின் நடுப்பகுதியில் எமக்குத் தெரிந்தவையெல்லாம் ஆயுதங்களைச்சேகரித்துக்கொள்வதும் எதிரியை அழித்துவிடுவதும் தான். சந்திகளும் சாலைத் திருப்பங்களும் இருள் சூழ்ந்து கோரமாய்த் தெரிந்த ஒரு காலம்! எங்காவது ஒரிடத்தில் ஒருசில மணி நேரத்திற்கு மேல் தரித்திருக்க முடியாத மரண பயம். மரணத்துள் வாழ்தல் என்பதைத் தமிழ் உணர்வுக்காக நாமே வரித்துக்கொண்டோம்.//

இவ்வளவும் போதும்.ஒரு வரலாற்றுக் கட்டத்தின் சமூக உளவியலைப் புரிந்துகொள்ள.சிறுபான்மை இனங்கள்மீது அத்துமீறிய அடக்குமுறையைக்கட்டவிழ்த்துவிட்ட அரச வன்முறையை இதைவிடப் புரிய எதுவும் தேவை இல்லை.

Reply

13. *சதாசிவம்*
Posted on 12/30/2009 at 6:16 pm

ஐயர் எழுத புறப்பட்டிருப்பது பிரபாகரனின் போராட்ட வரலாற்றில் முன்பக்க சரித்திரம். அச்சரித்திரத்தை இன்றும் வாழும் போராட்ட முன்னோடிகளிடம் கேட்டு உறுதிப்படுத்துவது
நல்லது பதினாறு வயதில் பஸ் எரிக்க புறப்பட்ட போது வயது முதிர்ந்த போராட்ட தோழர்கள்
அவரை தனியே விட்டு ஓடிய போதும் உறுதி தளராது தன்னந்தனியே காரியத்தை முடித்தான் அந்த உறுதியும் துணிவுமே முள்ளிவாய்க்கால் வரை அவர் கூடவே வந்தது இந்த இடைப்பட்ட
காலத்தில் இந்த மாபெரும் இயக்கத்தை கட்டியெழுப்ப என்ன பாடுபட்டான் என்பது இறுதிவரை
கூட இருந்தவர்களுக்கு தெரியும். சூழ்ச்சிகளும் துரோகங்களும் நிறையவே கண்டான் கண்டிக்க வேண்டியவர்களை கண்டித்து தண்டிக்க வேண்டியவர்களை தண்டித்தான் இவற்றின் பெயர் தன்னாதிக்கம் உட்படுகொலை .வேறு என்ன செய்ய சொல்கிறீர்கள் தலைவன் மடியில் உயிர்
விடும் போதுகூட தாய் தந்தையரை நினைக்காது தம்பி தம்பி என்று அழைத்தபடி மாண்டு
போனானே சங்கர் அவனை மறக்கவா ஆயிரமாயிரமாய் தலைவன் பின்னே சென்று தாய் தந்தையரை மறந்து கட்டியமனைவியை மறந்து பெற்ற பிள்ளைகளை மறந்து இறுதி வரை
களமாடி தங்கள் உடல்களையே வெடிகுண்டுகளாக்கி சிதறினரே எங்கள் தோழர்கள் அவர்கள் பதிவை யார் எழுதுவது நீங்கள் எழுதுவதை எழுதுங்கள் உண்மையை எழுதுங்கள்
தன்பிள்ளைகளையும் தாய் மண்ணுக்கு தாரைவார்த்த தலைவன் மீதும் மாவீர செல்வங்கள்

www.tamilarangam.net

மீதும் மாசு கற்பிக்காமல் எழுதுங்கள் அடையாளம் காட்டிய கருணாவாக இல்லாமல்
தோழனுக்காக இருசொட்டு கண்ணீர் விடும் சக தோழனாக எழுதுங்கள்
http://www.youtube.com/watch?v=f4ZZ5x_SKeA&feature=related
http://www.youtube.com/watch?v=kVZKvTpL7k8&feature=related

Reply

14. *mukilvannan*
Posted on 12/30/2009 at 6:18 pm

நாங்கல் செய்யவும் மாட்டம் செய்பவர்கலை குட்ரம் கண்டு புடிப்பொம் இதுநமது குணம்.அய்யர் தனது காலத்தை எலுதல் இன்ரய தெவை.அவரை பிடுங்காமல் அவதானிப்பொம்.வரலாரு பதியபாடுகிரது.

Reply

15. *Shiva*
Posted on 12/31/2009 at 2:38 am

இப் பதிவுகள் வேறொரு இணையத் தளத்தில் வரலாற்றைப் பதிவதாகக் கூறி உயிரோடிருந்த முன்னாட் தோழர்களைக் காட்டி க்கொடுக்கும் விதமாகத் "தகவல்கள்" தரப்பட்டிருந்தது போல அமையாமல் தவிர்ப்பது நல்லது.

ஏனெனில் பலர் இன்னமும் பாதுகாப்பற்ற சூழலிலேயே வாழுகின்றனர்.

நமக்குத் தேவை ஒரு தலைமையும் ஒரு இயக்கமும் எவ்வாறு செயற்பட்டுத் தம்மை அழிவுக்குள் தள்ள நேர்ந்தது என்பது மட்டுமே. சரி பிழைகளை எல்லாம் தனி மனிதர் மீது சுமத்துகிற போக்கு இது வரை இல்லாமை நல்லது.

சரியோ பிழையோ, சுய முன்னேற்றத்துக்காகவன்றி மக்களின் விடுதலைக்காக என்று தங்களை அர்ப்பணித்த இளையோரை இயக்க வேறுபாடின்றி நாம் மதிக்க வேண்டும். தவறுகளை விமர்சிப்பது வேறு விடயம் .அது தனிமனிதர்கள் மீதான குற்றங் கூறலாக அமையாது கொள்கையும் நடைமுறையும் சார்ந்து அமைவது சிறப்பு.

Reply

## Leave a Reply

பெயர் (required)

மின்னஞ்சல் (வெளியிடப்பட மாட்டாது) (required)

இணையம்

உங்கள் கருத்துக்களைப் பதிவு செய்யுங்கள்..

English Bamini Tamil-English

**Add Webcam Comment**
**Add Audio-only Comment**